22nd November 1963]

MR. SPEAKER : The hon. Member Sri K. T. Kosalram may say what he wants to say.

திரு. கே. டி. கோசல்ராம் : என்னுடைய கேள்விக்கு கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் ஒரு சர்க்காருக்கு மற்றொரு சர்க்கார் எழுத முடியாது, சிபாரிசு செய்ய முடியாது என்றும், இந்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் சிபாரிசு செய்ய முடியாது என்று அது ஏதோ அன்னிய சர்க்கார் மாதிரி பதில் சொன்னார்கள். என்னுடைய கேள்விக்குச் சரியாக பதில் சொல்லாத காரணத்தினால் அதைப் பற்றி விவாதிக்க ½ மணி நேர விவாதத்திற்கு இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த சர்க்கார் இன்னொரு சர்க்காருக்கு சிபாரிசு செய்வதில்லை என்றுதான் சொன்னார்கள். இதற்கு ஒரு அரை மணி நேர விவாதம் என்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லை.

MR. SPEAKER : Request for a half-hour discussion has now become contagious. I want to put an end to that.

III.—ANNOUNCEMENTS.

(I) ARREST OF A MEMBER AND RELEASE OF MEMBERS

MR. SPEAKER : I have to announce to the House that I have received a communication from the Inspector-General of Police, Madras, on 21st November 1963 that the Salem district police have arrested Sri R. Nallamuthu, M.L.A. of Nallasamudram on 21st November 1963 at Tiruchengode, under section 151, Criminal Procedure Code.

I have also to announce to the House that I have received a message at 10-00 p.m. yesterday, from the Superintendent of Police, Salem, that Sri Sriramulu and Sri R. Nallamuthu, M.L.As. have been released.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்படி சட்ட மன்ற உறுப்பினர்கள் திடீரென்று கைது செய்யப்படுவதற்கும், திடீரென்று விடுதலை செய்யப்படுவதற்கும் என்ன காரணம் ?

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் முன்பே கூறினேன். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், வேறு எந்த பொறுப்பு வகிக்கின்றவர்களாக இருந்தாலும், போலீஸாரைப் பொறுத்தமட்டில் அவர்கள் பொறுப்பை அவர்கள் வகிக்கவேண்டும். சட்டத்தை மீறக்கூடியவர்களாக இருந்தால், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடியவர்களாக இருந்தால், போலீஸார் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது அவர்களுடைய கடமையும், பொறுப்புமாகும். அந்த வகையிலே போலீஸார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், கனம் அங்கத்தினர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதுபற்றிகூட, அவர்கள் சட்டத்தை மீறுவதிலே அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், மீறுவதாக கூறிக்

கொண்டு வந்திருக்கிறார்கள், ஆகையினாலே இதைத் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரின் பேரில் 151 செக்ஷன்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்று 1½ மணிக்கு கனம் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் என்னிடம் வந்து, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் சட்டத்தை மீறமாட்டார்கள், அவ்வாறு மீறுவதாக இல்லை என்று என்னிடம் தெரிவித்தார்கள். அதை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர்களிடமிருந்து தெரிந்து கொண்ட பிறகு, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்களிடம் சொன்னேன். இம்மாதிரி தலைவர்களே என்னிடம் கூறியிருக்கிறார்கள், மேலும் சட்டமன்றக் கூட்டம் நடக்கிறது, ஆகவே இப்பொழுது அவர்களை உடனே விடுதலை செய்துவிடலாம், போலீஸாருக்கு என்ன தகவல் இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் விடுதலை செய்துவிடலாமென்று நான் இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் கூறினேன். இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அதற்கு மேல் உத்தரவிட்டுத்தான். இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு ஒரு சந்தேகம். சில சட்டசபை அங்கத்தினர்களை சட்டத்தை மீறியதற்காகவோ அல்லது மீறக்கூடியவர்கள் என்று சந்தேகப்பட்டோ போலீஸார் கைது செய்திருக்கிறார்கள், ஆனால் அந்தக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் முதல் அமைச்சர் அவர்களிடம் சென்று சட்டசபை அங்கத்தினர்கள் சட்டத்தை மீறுவதாக இல்லை என்று உறுதி கூறியிருக்கிறார்கள். அந்த ஒரு சூழ்நிலையில் ஒரு அங்கத்தினர் சட்டத்தை மீறுவாரா, மீற மாட்டாரா என்று பார்த்து, அந்த அங்கத்தினரிடமிருந்து வாக்குறுதி பெற்று அவரைக் கைது செய்வதோ அல்லது விடுதலை செய்வதோ அரசாங்கத்தின் பொறுப்பா அல்லது, அவர் என்ன செய்தாலும் சரி, கட்சித் தலைவர்களுடைய உறுதிமொழிகளின் பேரில் அவரை விடுதலை செய்வது அரசாங்கத்தின் பொறுப்பா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் மற்ற கட்சியைப் பற்றி குறைவாகச் சொல்லவில்லை. என்னுடைய அபிப்பிராயம், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் தலைவர்களை மீறி அவர்கள் நடக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சூழ்நிலையை அரசினர் தவறாக நினைத்து நடவடிக்கை பலவற்றை எடுக்கிறார்கள் என்ற ஐயப்பாடு இருந்த காரணத்தினாலே, கழகம் எடுத்திருக்கிற

22nd November 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அத்தகைய நிலைமைகளை கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் நேற்று விளக்கி எடுத்துத் தெரிவித்தேன். பத்திரிகைகளிலே, பல்வேறு செய்தித் தாள்களிலே பல்வேறு முறைகளில் அறிக்கைகள் வந்திருக்கிற காரணத்தினாலே, கழகம் முடிவெடுக்காத முடிவுகளைப்பற்றி பல பத்திரிகைகள் தெரிவித்துக்கொண்டிருப்பதினாலே, ஒவ்வொரு செய்தித்தாளிலும் வெளிவருகிற முரண்பாடான கருத்துக்களை அறிக்கை விட்டு மறுத்து கவனத்திற்குக்கொண்டு வருவதற்கு அவகாசம் இல்லாத காரணத்தினாலும், கழகம் எடுத்த நடவடிக்கைகள் இன்னென்ன, போக்குகள் இன்னென்ன என்பதை தெளிவுபடுத்தி, அதற்குப்பிறகு அந்த ஐயப்பாட்டை நீக்குவதற்கு நாங்கள் முயன்றோமே தவிர, அதன்மீது என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அந்தந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுங்கள் என்ற முறையில்தான் கழகத்தின் சார்பாக நான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தெளிவுபடுத்தினேன். அந்த முறையில்தான் எரிப்புப் போராட்டம், மறியல் போராட்டம் எந்தெந்த முறைப்படி நடக்கும் என்று நாங்கள் அறிவித்திருக்கிறோமோ அந்தந்த முறைப்படி நடைபெறும், எந்த நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும், முன்கூட்டியே அறிவித்துவிட்டு செல்வோம், ஏற்கனவே மறியல் போராட்டம், எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக இருப்பவர்கள் இதை மீறுவதாக இல்லை, இப்பொழுது கழகத்தினுடைய நோக்கம் 144 தடை உத்தரவை மீறுவது என்பது அல்ல, ஏற்கனவே எரிப்பு, மறியல் போராட்டத்தில் கலந்து கொள்வதாக பெயர் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் 144 தடை உத்தரவை மீறுவதாக இல்லை, அந்த முறையில் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மறியல், எரிப்புப் போராட்டத்தில் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் தான் கலந்து கொள்வார்களே தவிர, இப்பொழுது எரிப்பு, மறியல் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றோ, தடையை மீறுவார்கள் என்றோ ஐயப்பாடு அரசினருக்கு வேண்டாம், அந்த அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ளுங்கள் என்று நான் கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தெளிவுபடுத்தினேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

IV.—PRIVILEGE MATTER *re*: NON-COMMUNICATION OF INFORMATION ABOUT ARREST OF A MEMBER.

திரு. இராம. அரங்கண்ணல்: நேற்றைய தினம் கனம் உறுப்பினர் திரு. ஸ்ரீராமுலு கைது செய்யப்பட்டது குறித்து நான் உரிமைப் பிரேரபணைக் கொடுத்திருந்தேன். நான் தங்களிடம் இந்த உரிமைப் பிரச்னையை காலையில் 8-51-க்கு எழுப்பியிருந்தேன். பிறகு அந்த உறுப்பினர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நேரத்தில் 10-48-க்கு தகவல் வந்ததாக நம்முடைய துணைச் சபாநாயகர் அவர்கள் அறிவித்தார்கள். நேற்று அவர் 4 மணிக்கு கைது செய்யப்பட்டிருக்கிறார். இரவு 12